# செம்மாந்த வாழ்விற்கு வழிகாட்டும் கலித்தொகை

[1]கோ. கார்த்திகா, [2]பெ. இளையாப்பிள்ளை

[1] ஆய்வாளர், [2]பேராசிரியர்

[1]இலக்கியத்துறை,

[1] தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா.

***சுருக்கவுரை***

சங்க இலக்கிய நூல்களில் வாழ்வியல் நெறிகள் என்கின்ற அறக்கோட்பாடுகளே தலையாய நோக்கமாக காணப்படுகிறது. சங்க கால செவ்வியல் இலக்கியமான எட்டுத்தொகை நூல்களுள் ஆறாவது நூலாக அமைந்திருப்பது கலித்தொகை ஆகும். கற்றறிந்தார் ஏத்தும் கலி என்று போற்றப்படுகின்ற சிறப்புக்குரிய இந்நூலில் பண்டைய தமிழர்கள் மேன்மையான பண்பாட்டுடன் வாழ்ந்ததை புலவர்கள் தங்களது பாடல்களின் மூலம் உலகிற்கு வெளிப்படுத்தி உள்ளார்கள். கலித்தொகைப் பாடல்கள் அறநெறிகளோடு வாழவேண்டும் என்கின்ற பொதுவான கருத்துக்களைத் தெளிவுபட விளக்குகின்றன. நீதி இலக்கியங்களில் காணப்படும் கருத்துச் செறிவைப் போலவே கலித்தொகையிலும் அறக்கருத்துக்கள் மிகுந்துள்ளதை அறியமுடிகின்றது. செம்மாந்த வாழ்வு வாழும் வழியினைக் குறித்த அறவாழ்க்கையின் நோக்கத்தைச் செம்மையாகவும் அழுத்தமாகவும் கலித்தொகைப் பாடல்கள் தெளிவிக்கின்றன. அக்காலத்திற்கு மட்டுமல்ல இக்காலதிற்கும், எக்காலத்திற்கும் ஏற்ற வகையில் புலவர்கள் பாடிய அறநெறி கருத்துக்களை வருங்கால சமுதாயத்திற்கு எடுத்துக்கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச்சொற்கள்: சங்க இலக்கியம், எட்டுத்தொகை, கலித்தொகை

**முன்னுரை**

சங்க கால செவ்வியல் இலக்கியமான எட்டுத்தொகை நூல்களுள் ஆறாவது நூலாக அமைந்திருப்பது கலித்தொகை ஆகும். கற்றறிந்தார் ஏத்தும் கலி என்று போற்றப்படுகின்ற சிறப்புக்குரிய இந்நூலில் பண்டைய தமிழர்கள் மேன்மையான

பண்பாட்டுடன் வாழ்ந்ததை புலவர்கள் தங்களது பாடல்களின் மூலம் உலகிற்கு வெளிப்படுத்தி உள்ளார்கள்.

பொதுவில் அறக்கருத்துகளைத் தாங்கிய நீதிநூல்கள் பல தமிழ் இலக்கியங்களிலே உண்டென்றபோதிலும் அவற்றைச் சுவையுற எடுத்துரைப்பதில் கலித்தொகைக்கு நிகர் அதுவே. கலித்தொகையின் உவமை நயங்கள் தனிச்சிறப்பு வாய்ந்திருத்தலே அதற்குக் காரணமாகவும் அமைகிறது.

கருத்துணர் உவமைகள், புலனுணர்வு உவமைகள் என 150 பாடல்களில் 641 உவமைகள் கொண்ட கலித்தொகையின் வழி பெறப்படும் அறநெறிச் சாரம் பிற நூல்களிலிளிருந்து பெறுபவற்றைக் காட்டிலும் சுவைமிகுந்ததாகவும் கற்பவர்க்குக் களிப்பூட்டுவதாகவும் அமைந்திருப்பதே தனிச்சிறப்பு.

தலைவனானவன் அறமும், அன்பும், பண்பும் கலந்த வாழ்வினை வாழவேண்டும். அறம் மீறாதவன் வாழ்வான், அறம் மீறியவன் தாழ்வான் என்பதற்கேற்ப அறவாழ்வில் தலைவன், தலைவி, மக்கள், மன்னன் இவர்களெல்லாம் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் நெறிமுறைகளைக் கலித்தொகை கூறுகிறது.

கலித்தொகை நூல் முழுவதையும் ஆழ்ந்து கற்றால் எல்லாப் பண்புகளையும் படித்தறிந்து இன்புறலாம். பண்பாடு மிக்க சங்க காலத் தமிழர் வாழ்வு மீண்டும் தழைக்கவும் அதனால் அன்பும் அறனும் செழிக்கவும் செம்மாந்த வாழ்விற்கு வழிகாட்டும் கலித்தொகை பாடல்களைப் பற்றி இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

## கலித்தொகை காட்டும் அற வாழ்வு இல்லறம்

அறம் என்பது ஒழுக்க நெறியாகும். பிற உயிர்களுக்கு உதவுவதும், துன்பம் செய்யாமையுமே அறம் ஆகும். மேலும் அறம் என்னும் சொல்லிற்கு ஒழுக்கம், வழக்கம், நீதி, கடமை, ஈகை, புண்ணியம், அறக்கடவுள், சமயம் என்ற எட்டுவகையான பொருள்கள் பெரு வழக்கமாக வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழர் காதலையும் வீரத்தையும் தம் கண்களாகப் போற்றினர். காதல் உணர்வை அகம் என்றனர். வீரத்தைப் புறம் என்றனர். அகவாழ்விலும் புறவாழ்விலும் அறநெறி கொண்டு வாழ்க்கை நடத்தினர்.

அகவாழ்வில் அறத்தோடு பொருந்தி இல்லற வாழ்வினை மேற்கொண்டனர். ஆடையைப் பகுத்து உடுத்து வாழும் வறுமை நிலையிலும் மனம் ஒன்றி வாழும் ஒத்த அன்பு வாழ்க்கையே சிறந்த இல்லறம் என்பதை,

**"ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும்**
**ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை"** 1

என்ற கலித்தொகை வரிகள் விளக்குகின்றன.

**கலித்தொகை காட்டும் ஈகை**

ஈகை செய்து இல்லறம் நிகழ்த்தும் தீவினை இல்லாதவனுடைய செல்வம் பெருகும் என்பதை,

**"ஈதலின் குறைகாட்டாது அறனறிந்து ஒழுகிய**
**தீதிலான் செல்வம் போல்" 2**

என்ற வரிகள் அறிவுறுத்துகின்றன.

**"ஆன்றவர் அடக்கம் போல் அலர் செல்லாச் சினைமொடும்**
**வல்லவர் யாழ்போல் வண்டார்க்கும் புதலொடும்**
**நல்லவர் நுடக்கம்போல் நயம் வந்த கொம்பொடும்**
**உணர்ந்தவர் ஈகைபோல் இணர்ஊழ்த்த மரந்தொடும்" 3**

வறியார்க்கு ஈவதை ஒரு இளவேனில் காட்சியை வருணிப்பதைப் போல பாடப்பட்டுள்ளது. கல்வி, கேள்வி, ஒழுக்கங்களால் நிறைந்தவர்கள் அடங்கி இருப்பர், அது போல கிளைகளில் உள்ள அரும்புகள் மலரும் பருவம் வரும் வரை அடக்கமாக இருந்தவனாம். புதர்களில் உள்ள வண்டுகள் யாழிசைப்பதில் வல்லவர்கள் போல்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

ஆரவாரித்தனவாம். நடனப்பெண்டிர் அசைந்தாடுவது போல அழகான பூம்கொம்புகள் அசைந்து ஆடினவாம். பொருளின் தன்மையை உணர்ந்தவர்கள் வறியார்க்கு ஈவதைப் போல மரங்கள் பூங்கொத்துகளிலிருந்து பூந்துகளைச் சொரிந்தனவாம் என்பதே இப்பாடலின் கருத்து.

ஈதலின் சிறப்பாக "இரந்தோர்க்கு இல்லையென்னாது ஈதலும், பயன் கருதாது ஒருவருக்கு ஒரே பொருளைக் கொடுத்தலே ஈகையறமாகும். இதனை,

**"ஆற்றுதல் என்பது அலர்ந்தவர்க்கு உதவுதல்"** 4

என்று நெய்தற் கலிப்பாடல் மூலம் அறியமுடிகிறது.

வாழ்வில் ஒவ்வொரு மனிதனும் பொருளீட்டி தாமே நுகராமல், இல்லை என்று நம்மிடம் வந்து இரந்தோர்க்கு கொடுத்து வாழ்விக்க வேண்டும் என்ற நெறிமுறையை கூறுகிறது.

### கலித்தொகை காட்டும் பொருள் ஈட்டும் வழி

பொருளைத் தவிர வேறு சிறந்த பொருளும் உலக வாழ்க்கைக்கு உண்டோ? என்ற கேள்வி கேட்பதன் மூலம் வாழ்விற்கு பொருள் ஈட்டும் முக்கியத்துவத்தை கலித்தொகை பாடல்கள் உணர்த்துகிறது.

பொருள் உலக வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்பதால் நடுவுநிலைமை நீங்கி பொருள் ஈட்டினால் அப்பொருள் இம்மைக்கும் மறுமைக்கும் பகையாகும் என்று செமாந்த வாழ்விற்கு வழி காட்டுகிறது கலித்தொகையின் பாலைக்கலி பாடல்.

**“பொருள் அல்லால் பொருளும் உண்டோ?”** 5

### கலித்தொகை காட்டும் செமாந்த வழி

கலித்தொகை நூலுக்கே முடிமணியாக செமாந்த வாழ்விற்கு வழி தரும் குண நலன்களுக்கு நல்லந்துவனார் கச்சிதமான நெய்தல் கலியின் பாடலில் அழகாக இலக்கணம் வகுத்துள்ளார். ஆற்றுதல், போற்றுதல், பண்பு, அன்பு, அறிவு, செறிவு, நிறை, முறை, பொறை ஆகியன யாவை எனப் பொருளுரைக்கும் இப்பாடலே

அறநெறிகளைக் குறித்து எழுந்துள்ள பிற கலித்தொகைப் பாடல்களுக்கெல்லாம் தலையாகும்.

இப்பாடலின் வழி ஆற்றுதல் என்பது வறுமையில் உழல்பவர்களுக்குத் தம்மால் இயன்றதைக் கொடுத்து உதவுவதையும், போற்றுதல் எனப்பட்டது கூடி மகிழ்ந்தவரைப் பிரியாதிருத்தலையும், பண்பு என்பது மக்கள் யாவரும் உலகத்தோடு ஒட்டி ஒழுகுதலையும், அன்பு என்பது கற்றத்தாருடன் இணைந்து வாழ்தலையும், அறிவு என்பது அறிவற்றவர்கள் தம்மைப் பார்த்துப் அவச்சொற்களைப் பேசுகின்ற பொருட்படுத்தாமையையும், செறிவு என்பது கூறியது எதையும் எந்த நிலையிலும் மறவாதிருந்து அறத்தின் வழி நடப்பதையும், நிறை என்பது மறைவாகக் காக்கப்பட வேண்டியவை அனைத்தையும் எந்த நிலையிலும் காத்துப் போற்றுதலையும், முறை என்பது தவறு செய்தவர்கள் உறவினர்களாகவே இருந்தாலும் அவர்கள் செய்த தவறுகளைக் கண்டிப்பதையும், பொறை என்பது தன்னை இழித்துரைப்பவர்களிடமும் சினம் கொள்ளாது பொறுமையுடன் இருத்தலையும் குறிக்கின்றது.

**“ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்**
**போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை**
**பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்**
**அன்பு எனப்படுவது தன்கிளை செறா அமை**
**அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்**
**செறிவு எனப்படுவது கூறியது மறா அமை**
**நிறைவு எனப்படுவது மறை பிறர் அறியாமை**
**முறை எனப்படுவது கண்ணோடாது உயிர் வௌவல்**
**பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்”6**

வாழ்வியலுக்கேற்ற அறநெறிகளின் தொகுப்பாக உள்ள இப்பாடல் இக்கட்டுரையின் நோக்கத்தை நிறைவேற்றுவதாக அமைந்துள்ளது.

## முடிவுரை

கலித்தொகையில் அகப்பொருளை எடுத்துக் கூறும் பாடல்கள் கற்போர்க்கு ஏற்றம் தரும் வகையில் ஏற்புடையதாய் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பண்புகள்

கவினார்ந்த உவமைகள் வழியாகவும் கவர்ச்சி மிகு நிகழ்ச்சிகள் வாயிலாகவும் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. கலித்தொகையில் புலவர்கள் பாடிய பாடல்களால் பண்டைத் தமிழர் தம் பண்பாட்டு நலனை அறிந்து அவற்றை வாழ்விலும் கடைப்பிடித்து ஒழுகவும் செம்மாந்த வாழ்வு வாழவும் வழிகோலுகிறது.

## அடிக்குறிப்பு

[1] கலித்தொகை பாடல் எண். 9.23-24.
[2] கலித்தொகை பாடல் எண். 27.2.
[3] கலித்தொகை பாலைக்கலி பாடல் எண். 31-8-11.
[4] கலித்தொகை பாடல் எண். 133.6.
[5] கலித்தொகை பாலைக்கலி பாடல் எண்.13-10.
[6] கலித்தொகை நெய்தல் கலி பாடல் எண்.16.

## துணைநூல்கள்

[1] வ.சு.மாணிக்கனார், கலித்தொகை மூலமும் உரையும், பூம்புகர் பதிப்பகம் சென்னை, 2009.

[2] மயிலை சீனி. வேங்கடசாமி, சங்க கால மக்கள் வாழ்க்கை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிட்., சென்னை, முதல் பதிப்பு: மார்ச், 1974.

[3] சாமி சிதம்பரனார், எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், இலக்கிய நிலையம்,சென்னை, 1974.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*